சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.6/2020

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.P.பொன்னுத்தாய் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – வீரபாண்டி (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதிகள் தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 02.05.2012 ம் தேதியிட்ட 1ம் வாதி, 1 வது லக்க சொத்தை கிரயம் பெற்ற கிரையப் பத்திரம் ( பத்திர எண்.1637/2012 அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.05.2012 ம் தேதியிட்ட 2 ம் வாதி, 2 வது லக்க சொத்தை கிரயம் பெற்ற கிரையப் பத்திரம் ( பத்திர எண்.1636/2012 அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.05.2019 ம் தேதியிட்ட 1ம் வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது (2019-2020 ) அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் வாதி பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.10.2019 ம்தேதியிட்ட 1ம் வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.05.2012 ம் தேதியிட்ட பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரையப் பத்திரம் ( பத்திர

எண்.1635/2012) SRO நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.11.2019 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS No.173/2018 தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கு தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.08.2023 ம் தேதியிட்ட சர்வே எண்.567/13 க்குரிய வில்லங்கச் சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.09.2013 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்குரிய செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் ( SLR) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் **நீ.ம.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.